THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 31st March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Conclusions of the National Development Council

* 377 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a statement showing :

(*a*) the conclusions arrived at the meeting of the National Development Council held in November 1963, in so far as they relate to Madras State; and

(*b*) the details of the action taken so far, in the light of these conclusions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : A statement[a] showing the main recommendations of the National Development Council and the action taken thereon is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விவசாய அபிவிருத்திக்கு வேண்டி நம்முடைய ராஜ்யத்தில் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் என்னென்ன சிபார்சு செய்யப்பட்டதோ, அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவைகளையெல்லாம் இங்கு வைக்கப்பட்ட பேப்பரில் காணலாம்,

புலவர் கா. கோவிந்தன் : இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. கிராமம் என்று சொல்லும் நேரத்தில் ரெவின்யூ கிராமங்களுக்குத்தான் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. காணி கிராமங்களில் வசதி செய்து கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்திலே அந்தக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக எல்லாக் கிராமப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஃபோர்டு பவுண்டேஷன் எதைச் சொல்லியிருந்தாலும் சரி, நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் போதுமானதாக இல்லை

---

[a] Printed as Appendix I on pages 662–678

சாகுபடி செய்யக்கூடிய விவசாயிக்குப் போதுமான பாதுகாப்பு செய்யப்படுவதாக இல்லை. அதனால் உற்பத்தி குறைகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறதா? அப்படியிருந்தால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போதுள்ள சட்டம் போதுமானதாக இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், பயிரிடுகின்றவர்களிடையே பாதுகாப்புச் சட்டம் நிரந்தரமாக இல்லை என்ற குறை தெரிவிக்கப்பட்டது. இது நிரந்தரமாக்கப்படவிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : கிணற்றுப் பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் கிணற்றுப்பாசனம்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கு ஓனர் சர்டிபிகேட் போன்றவைகள் வாங்குவது மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகையால் இது சம்பந்தப்பட்ட விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விதிமுறைகள் ஏற்கெனவே தளர்த்தப்பட்டிருக்கின்றன. மேலும் தளர்த்தப்படவேண்டுமென்று குறிப்பாகத் தெரிவித்தால் கவனிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மைனர் இர்ரிகேஷன் சம்பந்தப்பட்டவரை மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 12 கோடிக்குப் பதில் 19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் சொல்லமுடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் விரிவான சட்டம் கொண்டுவர உத்தேசம் இருப்பதாகக் கூறினார்கள். ஐந்து வருஷங்களாக இந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய பதவிக்காலம் முடிவதற்குள்ளாகவாவது இந்தச் சட்டத்தைக் கொண்டுவரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விரிவான சட்டம் என்று சொன்னால் புதிய சட்டம் என்று பொருள் அல்ல. எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து காம்ப்ரஹன்சிவ் லெஜிஸ்லேஷனைக் கொண்டுவர வேண்டும். சட்டம் எல்லாம் நிரந்தரச் சட்டமாகக் கொண்டுவர வேண்டும். ஆகையால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக எவ்வளவு சீக்கிரத்தில் தயாரித்துக் கொண்டுவரமுடியுமோ, அந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் கனிப்பொருள் படிவங்கள்

*378 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலப் புவியியல் யூனிட் சேலம் மாவட்டத்தில் காணும் கனி வளங்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்தியதா?